# தூத்துக்குடி மாமன்றம்

2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் தேதி புதன்கிழமை காலை 11. 00 மணிக்கு மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்

## பொருள்

1. முத்துக்குளிக்கும் முத்துமாநகர் என்ற பெயருடன் கடல் மார்க்கமாய் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் தேவையான பொருள்களை ஏற்றுமதி தொழில் செய்து, உலக தரத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் செயல்பட்டு வரும் எழில்மிகு துறைமுகத்தினை தன்னகத்தே கொண்டு அமைந்துள்ள தூத்துக்குடியை மாநகராட்சியாய் தரம் உயர்த்திய தமிழக அரசுக்கும் மாநகராட்சியை மங்களகரமாக தன் பொற்கரங்களால் தொடங்கி வைத்த முத்தமிழறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை இம்மாமன்றம் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும் துவக்கவிழா நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உள்ளாட்சிகளின் செயல்பாட்டை அனைவரும் போற்றும் வகையில் உரை நிகழ்த்திய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் எண்: 1**

ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் அவர்களுக்கும், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினர் திரு என்.பெரியசாமி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.